ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2483/15 - 2026 අප්‍රේල් මස 10 වැනි සිකුරාදා - 2026.04.10

*2483/15 ஆம் இலக்கம் – 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் மாத்தளை மாநகர சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

மாத்தளை மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டு விலகியதன் காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், மாத்தளை மாநகர சபையின் இலக்கம் 6 புகையிரத நிலைய பிளேஸ் வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட திரு. முஹமட் மன்சூர் முஹமட் நவ்ஸாட் என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான மாத்தளை மாநகர சபையின் இலக்கம் 6 - புகையிரத நிலைய பிளேஸ் வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீரமானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. கிரிஸான் துஸார தர்ஷிக வாசலகே என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்.

மாத்தளை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான ஹெட்டிகே ஆசிரி எரங்க புஷ்பகுமார ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. கிரிஸான் துஸார தர்ஷிக வாசலகே என்பவர் மாத்தளை மாநகர சபையின் இலக்கம் 6 - புகையிரத நிலைய பிளேஸ் வட்டாரத்திற்கு உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**எச். ஏ. ஈ. புஷ்பகுமார,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
மாத்தளை மாநகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தளை,
2026, ஏப்பிறல் 10.

EOG 04 - 0056

1A - PG 7596 — 08 (2026/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## (262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் மீரிகம பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

மீரிகம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், மீரிகம பிரதேச சபையின் இலக்கம் 25 பஸ்யால வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட திருமதி/ செல்வி வீரப்புலிகே திலினி இமல்கா டயஸ் என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான மீரிகம பிரதேச சபையின் இலக்கம் 25 பஸ்யால வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திருமதி/செல்வி மஹ பதிரென்னெஹெலாகே சிராணி தேவிகா நில்மிணி என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

மீரிகம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுலரான விதான அப்புஹாமில்லாகே ரவீன்திர விக்ரமசிங்ஹ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திருமதி/ செல்வி மஹ பதிரென்னெஹெலாகே ஷிராணி தேவிகா நில்மிணி என்பவர் மீரிகம பிரதேச சபையின் இலக்கம் 25 பஸ்யால வட்டாரத்திற்கு உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**டபிள்யூ. ஏ. ரவீன்திர விக்ரமசிங்ஹ,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
மீரிகம பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கம்பஹா,
2026, ஏப்பிறல் 08.

EOG 04 - 0057